# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, ஏப்ரல் 07, 2023

## நெஸ்டமோல்ற்று SALARY for LIFE 2022 வெற்றியாளர் தெரிவு நிறைவுபெறுகிறது

*இலங்கை குடும்பங்களின் அபிலாஷைகளுக்கு வலுவூட்டும் முயற்சியைத் தொடர்கிறது*

நெஸ்லே நெஸ்டமோல்ற்று, SALARY for LIFE 2022 வெற்றியாளர் தெரிவு நிறைவடைந்துள்ளதுடன், இது மற்றொரு விசுவாசமான நுகர்வோரின் இலட்சியங்களுக்கு வலுவூட்டுகிறது. சாதனை மிக்க எண்ணிக்கையிலான நுழைவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்த நிலையில், இந்த வர்த்தகநாமம் தனது தனித்துவமான நுகர்வோர் ஊக்குவிப்பின் மூன்றாம் கட்டத்தின் வெற்றியாளராக பமுனுகமவைச் சேர்ந்த திருமதி பி. கே. ஸ்ரீயாமினி திலினி ரொட்ரிகோ அவர்களை அறிவித்துள்ளது. போட்டியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அவருக்கு 55 வயதாகும் வரை ஒவ்வொரு மாதமும் ரூபா 50,000 வழங்கப்படவுள்ளது.

“மூன்று பிள்ளைகளின் தாயாராக, கடந்த ஆண்டுக்கான SALARY for LIFE ஐ வெல்வது உண்மையிலேயே வாழ்க்கையை மாற்றியமைக்கக்கூடியது. கடந்த சில வருடங்கள் எங்களுக்கு மிகவும் சவாலானவையாக இருந்துள்ளதுடன், மேலும் இதுபோன்றதொரு போட்டியை நடத்தியதற்காக நெஸ்லே நெஸ்டமோல்ற்றுக்கு நன்றியை தெரிவிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை. ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி எனது குடும்பத்தின் அபிலாஷைகளை வலுப்படுத்தவும், அவர்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தவும் இந்த வெகுமதி எனக்கு உதவும்,” என திருமதி பி. கே. ஸ்ரீயாமினி திலினி ரொட்ரிகோ அவர்கள் கருத்து வெளியிட்டார்.

தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், SALARY for LIFE 2022 போட்டியானது டிஜிட்டல் முறையில் நடத்தப்பட்டது. இதற்காக, வாடிக்கையாளர்கள் 400 கிராம் நெஸ்டமோல்ற்று பாக்கெட்டுக்களின் மேலுறையின் உட்புறத்தில் அச்சிடப்பட்ட தனித்துவமான குறியீட்டை SMS மூலம் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டிருந்தனர். நெஸ்லே லங்காவின் பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்களுக்கான பணிப்பாளர் திரு. ருவான் வெலிகல, நெஸ்லே லங்காவின் விற்பனைப் பணிப்பாளர் திரு. ஜகத் வெதகே, நெஸ்லே லங்காவின் சட்ட உதவிப் பணிப்பாளர் திரு. கீர்த்தி பதிராஜா மற்றும் மேல் மாகாண இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட வரி அதிகாரியான ஸ்ரீயானி நாபகத ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற டிஜிட்டல் முறை குலுக்கல் சீட்டிழுப்பில் வெற்றியாளர் எழுந்தேற்றமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நெஸ்லே லங்காவின் பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்களுக்கான பணிப்பாளர் திரு. ருவான் வெலிகல அவர்கள் இப்போட்டி பற்றிய தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கையில், “60 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் அங்கம் வகித்து வந்துள்ள நெஸ்லே நெஸ்டமோல்ற்று, தனது நுகர்வோருக்கு ஒவ்வொரு நாளையும் 100% எதிர்பார்ப்புடன் முகங்கொடுக்க உதவுவதன் மூலம், அவர்களின் முன்னேற்றத்திற்கு சாதகமான உத்வேகத்தை வழங்க எப்போதும் அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்த சவாலான காலகட்டத்தில், எங்கள் விசுவாசமான நுகர்வோருக்கு உதவிக்கரம் நீட்டுவதன் மூலம், எங்கள் ஆதரவையும் நன்றியையும் காண்பிக்க விரும்புகிறோம். அந்தவகையில், SALARY for LIFE என்பது இலங்கை குடும்பங்களின் அபிலாஷைகளை வலுப்படுத்தும் நெஸ்லே நெஸ்டமோல்ற்றின் நல்நோக்கத்தின் உண்மையான பிரதிபலிப்பாகும்,” என்று குறிப்பிட்டார்.

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு செழிப்பூட்டும் அங்கமாகத் திகழ்ந்து வருகிறது. நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற அதன் தயாரிப்புக்களில் 90% இற்கும் மேற்பட்டவை குருணாகலிலுள்ள அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. நிறுவனத்தின் முதன்மையான வர்த்தகநாமமான, *நெஸ்டமோல்ற்று* 60 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் குடும்பங்களின் நம்பிக்கையை வென்று, அவர்களால் சுவைத்து மகிழப்பட்டு வருகின்றது. பிரத்தியேகமாக இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்பட்டு, நாட்டின் மிகவும் அபிமானம் பெற்ற மோல்ற்று அடங்கிய பானம் என்ற தனித்துவமான நாமத்துடன், மோல்ற்று அடங்கிய பார்லி மற்றும் பாலின் நலச்செழுமைகளை வழங்கி வருவதுடன், அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்களால் இது செழுமையூட்டப்பட்டுள்ளது.

---

**தொடர்புகளுக்கு:**


| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |

| | | | |
|---|---|---|---|
| நிறுவன தொடர்பாடல்கள் | இசுரி அழகக்கோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |